Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, SEPTEMBER 10, 2021

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 10, 2021 | ஒளி: 07 கதிர் 97 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




# நீடிக்கப்படுமா? இன்று பகல் முடிவு

செப்டெம்பர் 13ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையிலும் அமல்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பதா, இல்லையா? என்பது தொடர்பில் இன்று (10) பகல் தீர்மானிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## நுவரெலியாவில் 5 வருடங்களில்

# 50 ஆயிரத்தை தாண்டியது குடும்பக்கட்டுப்பாடு

பிரத்தியேக செய்தி



■ பா.நிரோஸ்

இந்தியா வம்சாவளி தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களில் (2015 - 2019) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் 52 ஆயிரத்து 183 குடும்பக்கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலய தகவல்கள் உறுதி செய்துள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் குடும்பங்களை ஏமாற்றி, குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொடர் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற, குறிப்பாக இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் கடந்தக் காலங்களில் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# நல்லிணக்க விடயங்களில் இலங்கையுடன் இருக்கும்



### அமெரிக்கா தூதுவர் தெரிவிப்பு

**சிரமமான பேச்சுவார்த்தை நீடித்த மாற்றத்தை அடைய உதவும்**

நல்லிணக்க விடயங்களில் இலங்கையுடன் இணைந்திருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ், மனித உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமென்று அமெரிக்கா கருதுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 637 பேர் கைது

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், தனிமைப்படுத்தல் சட்டம் ஆகிய சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 637 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (09) காலை 06 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், இந்த காலப்பகுதியில் 41 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# பதுக்கல் தவிர்



சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அவை நிவாரண விலைக்கு விற்பனை செய்யப்படும் என தெரிவித்துள்ள வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன,
ஆகவே வியாபாரிகள், பிரதான நிலை உற்பத்தியாளர்கள் அத்தியாவசிய பொருட்களை பதுக்குவதை இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



## கசிப்புக்கு அடிமையானவர் சிறுநீரகத்தை இழந்து மரணம்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மாணிக்கபுரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் சிறுநீரகம், ஈரல் உள்ளிட்ட உடற்பாகங்கள் செயல் இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இறக்குமதியாளர்களுக்கு பெரும் நெருக்கடி



இறக்குமதி செய்யப்படும் 623 பொருட்களுக்கு நூற்றுக்கு நூறு சதவீதம் உத்தரவாதத் தொகையை இறக்குமதியாளர்கள் வைப்பிலிட வேண்டும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 60 வயதுக்கு மேல் மூன்றாவது டோஸ்

சினோர்ஃபாம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் ஏற்றப்பட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு, மூன்றாவது தடுப்பூசியாக வேறொரு தடுப்பூசியை பெற்றுக்கொடுக்குமாறு, இலங்கை வைத்திய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



## கொரோனா தொற்றியிருந்த தாய் மூன்று சிசுக்களைப் பிரசவித்தார்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த கர்ப்பிணி தாயொருவர், ஒரே சூலில் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார் என கொழும்பு டி.சொய்சா பெண்கள் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2


## இஷினி இராஜினாமா



தேசிய விலங்கியல் பூங்காத் துறையின் பணிப்பாளர் நாயகம் இஷினி விக்கிரமசிங்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

சட்டவிரோதமாக பிடிபட்ட யானைகளை கடத்தல்காரர்களிடமே மீளவும் கையளிப்பதற்கு தீர்மானிக்க ப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அட்டையில் குத்திக்கொண்டு கையில் ஏற்றாது நழுவினர்

கொரோனா தொற்று தடுப்பூசியை தாங்களும் ஏற்றிக்கொண்டோம் என்பதை காண்பிப்பதற்காக, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டையில், விவரங்களை பதிவு செய்துகொண்டு, தடுப்பூசியை ஏற்கிக்கொள்ளாது நழுவிய சம்பவமொன்று காலியில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## ஐஸ் சிக்கியது

வத்தளை, வனவாசல வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 12–18 வயதுக்கு இடைப்பட்டோருக்கு விரைவில் தடுப்பூசி

12-18 வயதுக்கு இடைப்பட்டோருக்கு விரைவில் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒன்றரை வருடங்களாக பாடசாலைகள் முடக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## கப்ராலுக்கு பதிலாக கொள்ளை பங்குதாரர்



இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்குப் பதிலாக, தேசிய பட்டியல் எம்.பி பதவிக்கு நியமிக்கப்படவிருப்பவர் கொள்ளையின் பங்குதாரர் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, புதியவருக்கு எதிராக கறுப்பு கொடி காண்பிக்க வருமாறும் அழைத்தார்.

தொடர்ச்சி P2

# வன்முறைகள் இடம்பெற்றால் முறைப்பாடு செய்யவும்

### யாழில் நாமல் எம்.பி தெரிவிப்பு

■ என்.ராஜ்



சட்டம், ஒழுங்கு நிலை நாட்டுவதற்காக பொலிஸார் தயாராக உள்ளார்கள். ஆகையால் எந்தவோர் இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் அதுதொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தால், பொலிஸார் நடவடிக்கைகளை எடுப்பர் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆட்சியேறும் தரப்பினருக்கு ஒருபுறம் அது; மறுபுறம் இது

அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தால் கொரோனாவை ஒழித்தால், அது பெரிய விடயமாகும் எனத் தெரிவித்துள்ள முருதெட்டுவாவே ஆனந்த தேரர், இந்த நாட்டில் ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களும் தத்தமது அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்காக அவசரகாலச்சட்டத்தை ஒருபுறமும் அத்தியாவசிய உணவு தொடர்பான சட்டமூலத்தை மறுபுறம் பயன்படுத்துகின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2

## இ.தொ.காவுக்கு புரியவில்லையா?

மலையக தொழிலாளரின் வாழ்வாதாரத்துக்கு புதிய நவீன வழி காட்டாமல், மலையக தொழிலாளர்களை தொடர்ந்தும் கூலிகளாகவே வைத்துக்கொண்டு, மலையக சுற்று சூழலுக்கும் ஆபத்தை விளைவிக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுக்கிறது எனத் தெரிவித்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, இதுபற்றி, இ.தொ.காவுக்கு தெரியாதா? தங்கள் அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்று தெரியாதா? என வினவினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 50 ஆயிரத்தை தாண்டியது குடும்பக்கட்டுப்பாடு

குடும்பக்கட்டுப்பாடு முறைகளான லூப்ஸ், மாத்திரை, தடுப்பூசி, ஆண்களுக்கான தூய்மையாக்கி (Male Sterilize - Vasectomy) பெண்களுக்கான தூய்மையாக்கி (Female Sterilize - LRT), வேறு முறைகள் என 6 முறைகளின் கீழ், நுவரெலியா மாவட்டத்தில் குடும்பக்கட்டுப்பாடுகளை செய்யப்படுகின்றன.

லூப்ஸ் முறையின் கீழ் 2015 - 1,587, 2016 - 2,579, 2017 - 1,533, 2018 - 1,170, 2019 - 1,543, என்ற எண்ணிக்கையில் குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாத்திரை முறையின் கீழ் 2015 - 1,642, 2016 - 2,406, 2017 - 1,638, 2018 - 1,766, 2019 - 1,855 என்ற எண்ணிக்கையில் குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தடுப்பூசி முறையின் கீழ் 2015 - 1,386, 2016 - 1,927, 2017 - 3,238, 2018 - 3,490, 2019 - 4,349 என்ற எண்ணிக்கையில் குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான தூய்மையாக்கி முறையின் கீழ் 2017 - 2019 வரையிலான மூன்று வருடங்களில் மொத்தமாகவே 76 குடும்பக்கட்டுப்பாடுகளே செய்யப்பட்டுள்ளன.

பெண்களுக்கான தூய்மையாக்கி முறையின் கீழ் 2015 - 1,423 , 2017 - 1,827, 2018 - 3,926, 2019 - 3,699 என்கிற எண்ணிக்கையிலும், வேறு முறைகளின் கீழ் 2015 - 1,423, 2017 - 3,944, 2018 - 3,926, 2019 - 3,699 என்கிற எண்ணிக்கையிலும் குடும்பக்கட்டுபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு முறையின் கீழும் அதிகளவான குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் அது எவ்வாறான முறைகள் என்பது தொடர்பான தகவல்கள் இல்லை.

2015 - 2019 வரையிலான 5 வருடங்களில் மாத்திரம் லூப்ஸ் முறையில் 8,412, மாத்திரை முறையில் 9,307, தடுப்பூசி முறையில் 14,390, ஆண்களுக்கான தூய்மையாக்கி முறையில் 76, பெண்களுக்கான தூய்மையாக்கி முறையில் 7,006, வேறு முறைகளின் கீழ் 12,992 குடும்பக்கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 5 வருடங்களுக்குள் 52,183 பேருக்கு குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சராசரியாக வருடம் ஒன்றுக்கு 10,403 பேருக்கு குடும்பக்கட்டுப்பாடுகள் நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் மேற்கொள்ளப்படுவது இதனூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் குடும்பக்கட்டுப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதும் தமிழ்மிரர் உறுதி செய்துள்ளது. இதன்படி 2015ஆம் ஆண்டு 7,461ஆக இருக்கும் மொத்த குடும்பக்கட்டுபாடுகளின் எண்ணிக்கை 2019ஆம் ஆண்டு 13,590ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களில் இந்த எண்ணிக்கை 6,129ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2015 - 2019 ஆம் ஆண்டுவரையில் கடந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் ஆட்சி செய்திருந்ததோடு, மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இருவர் அந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நீடிக்கப்படுமா? இன்று பகல் முடிவு

எனினும், கடுமையான கட்டுப்பாடுகளை தொடர்ந்து அமல்படுத்துவது தொடர்பிலே கூடுதலாக அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், இன்று (10) கூடும், ஜனாதிபதி கொவிட்-19 செயலணியிலேயே இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளது.

கொரோனா தொற்றினால் மரணிப்போர், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததைத் தொடர்ந்து, ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும் முதற்கட்டமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. எனினும், மரணங்களின் எண்ணிக்கையும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து கொண்டே சென்றமையால், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடிக்குமாறு பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே, எதிர்வரும் 13ஆம் திகதிவரையிலும் இரண்டாம் கட்டமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது.

# நல்லிணக்க ...

இது அமெரிக்கர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து நாட்டவர்களுக்கும் பொருந்தும். அவர்கள் அதனை அவர்களின் பங்காளர்களுடனும் மற்றும் விசேடமாக ஜனநாயக பங்காளர்களுடனும் செய்யவேண்டும் என்று கூறினார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமை விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த மற்றும் நிகழ்கால அநீதிகள்பற்றி கவனிக்கவேண்டும். எங்கள் பார்வையில் அனைத்து மக்களுக்கும் பொறுப்பான ஒரு ஜனநாயக அரசாங்கம் உண்மையுடனும், நம்பகத்தன்மையுடனும் குற்றச்செயல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கவேண்டும் என்று அவர் கூறியதை இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் மேற்கோள் காட்டி கூறியது.

இந்த விடயத்தில் நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் முழுமையாக இணைந்திருக்கிறோம். நல்லிணக்கம், நீதி மற்றும் முழு இலங்கையருக்குமான நீடித்த அமைதி ஆகியவற்றில் முன்செல்வோம் என்று நம்புகிறோம் என்று கூறினார்.

# இறக்குமதியாளர்களுக்கு...

எச்எஸ் குறியீடுகளைக் கொண்ட பொருள்களை இறக்குமதி செய்யும் போதே மேற்குறிப்பிட்ட நடைமுறை பின்பற்றப்படும் என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அலைபேசிகள், தொலைபேசிகள், தொலைக்காட்சி, கைக்கடிகாரம், குளர்சாதனபெட்டி, டயர்கள், பழங்கள், குளிரூட்டிகள், குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்ட 623 பொருட்களை இறக்குமதி செய்ய, நூற்றுக்கு நூறு சதவீதம் உத்தரவாதத் தொகையை செலுத்தவேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் இந்த அவசர அறிவிப்பை அடுத்து, குறிப்பிட்ட பொருட்களுக்கு எதிர்காலத்தில் பாரிய தட்டுப்பாடு ஏற்படுவதற்கும், இவ்வாறான பொருள்களின் விலைகள் பல மடங்குகளாக அதிகரிப்பதற்கும் சாத்தியக்கூறுகள் உள்ளனவென அறியமுடிகின்றது.

# 60 வயதுக்கு மேல்...

இதற்கமைய மூன்றாவது தடுப்பூசியாக அஸ்ட்ராசெனகா, ஃபைசர் அல்லது மொடர்னா ஆகிய தடுப்பூசிகளில் ஒன்றை பயன்படுத்த முடியும் என்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

பஹ்ரைனில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளை மேற்கோள் காட்டி, இந்த விடயத்தை தெரிவித்துள்ள இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம், சினோர்ஃபாம் தடுப்பூசி செலுத்தப்பட்ட 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் மரணிப்பது மற்றும் வைத்தியசாலையில் அனுமதிப்பவர்ளகளின் வீதம், எஸ்ட்ராசெனகா, பைசர் மற்றும் மொடர்னா ஆகிய தடுப்பூசிகளை ஏற்றியவர்களை விட அதிகமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் எஸ்ட்ராசெனகா தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதுடன், சினோர்ஃபாம் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களுள் 7 சதவீதமானவர்களுக்கே இந்த வாய்ப்பு கிடைப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது என இலங்கை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்த ஆய்வை அடிப்படையாக்க் கொண்டு, 18- 60 வயதுக்குட்பட்ட பாரிய நோய்தாக்கம் அல்லாத சகலருக்கும் சினோர்ஃபாம் தடுப்பூசியை செலுத்துமாறும் அச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பதுக்கல் தவிர்

நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை நிவாரண அடிப்படையில் விநியோகிக்கும் பொருப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்றும் காணொளி ஊடாக நேற்று (09) தெரிவித்துள்ளார்.

அரிசி விலையை நிர்ணயத்தன்மையில் பேணுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. இதன் காரணமாக ஒரு கிலோகிராம் நாடு அரிசி 120 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 150 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டன.

இதற்கமைய பெரும் போக விளைச்சலை தொடர்ந்து நாடு அரிசி ஒரு கிலோகிராம் 98 ரூபாவுக்கும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 103 ரூபாவுக்கும் வழங்க பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் வாக்குறுதியளித்தார்கள்.

இருப்பினும் கடந்த இரு வாரகாலமாக அரிசி உற்பத்தியாளர்கள் சந்தைக்கு முறையாக அரிசியை விநியோகிக்கவில்லை அத்துடன் சதொச நிறுவனத்தின் விலைமனுகோரலுக்கு சமூகமளிக்கவுமில்லை. வழமையாக ஒரு நாளைக்கு 5 தொடக்கம் 6 இலட்சம் கிலோகிராம் வரையிலான அரிசியை சந்தைக்கு விநியோகிக்கும் பிரதான நிலை உற்பத்தியாளர்கள், கடந்த இரு வாரங்களில் ஒரு நாளைக்கு 30 ஆயிரம் கிலோகிராம் அரிசியை மாத்திரம் சந்தைக்கு விநியோகித்தார்கள்.

அரிசி விநியோகத்தை குறைத்து சட்டவிரோதமான முறையில் அரசியை பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு பிரதான நிலை அரிசி உற்பத்தியார்கள் வகுத்த சூழ்ச்சி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் முறியடிக்கப்பட்டுள்ளன என்றார்.

# இஷினி இராஜினாமா

அத்தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே, தனது பதவியை அவர், இராஜினாமா செய்துள்ளார் உத்தியோகபூர்வற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கசிப்புக்கு அடிமையானவர் சிறுநீரகத்தை இழந்து மரணம்

நீண்டகாலமாக காச்சலினால் பீடிக்கப்பட்ட அவருக்கு எலிக்காச்சல் ஏற்பட்டுள்ளதென தெரியவந்தது. அதனையடுத்து, யாழ்போதான வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர், நேற்று முன்தினம் (08) உயிரிழந்துள்ளார்.

மாணிக்கபுரம் விசுவமடு பகுதியினை சேர்ந்த 28 வயதான ஆறுமுகம் யாதவராயன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சிறுநீரகம், ஈரல் உள்ளிட்ட இன்னும் சில உடற்பாகங்கள் முற்றாக செயலிழந்துள்ளமை மரண பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இளம் குடும்பஸ்தரான அவர், குடும்பத்தை விட்டு பிரிந்து தனியாக வாழ்கிறார் என்றும் கசிப்புக்கு அடிமையானவர் என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# கொரோனா தொற்றியிருந்த...

அப்பெண்ணுக்கு இன்றுக்காலை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தயாயும் மூன்று சிசுகளும் நலமாக இருக்கின்றனர்.

டெல்டா வைரஸின் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ளமையால், கர்ப்பம் தரிப்பதை ஒருவருடத்துக்கு தள்ளிப்போடுமாறு சுகாதார மேம்பாட்டு பணியகம், நேற்று முன்தினம் (08) வேண்டுகோள் விருத்திருந்தது.

கர்ப்பிணிகளுக்கும் கருவில் இருக்கும் சிசுகளுக்கும் டெல்டா வைரஸ் கடுமையாக தாக்கத்தை ஏற்படுத்துமென அந்த பணியகம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அட்டையில் குத்திக்கொண்டு கையில் ஏற்றாது நழுவினர்

இவ்வாறு முறைக்கேடு செய்து, அவ்வாறு தப்பிச்செல்ல முயன்ற சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சங்கமித்த மகளிர் வித்தியாலயத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று (09) முன்னெடுக்கப்பட்டது. சைனோர்ஃபாம் முதலாம் மற்றும் இரண்டாம் டோஸ்கள் ஏற்றப்பட்டன.

அந்த மத்திய நிலையத்துக்கு வந்திருந்தவர்களில் சிலர், தடுப்பூசி அட்டைகளில் விவரங்களை பதிவுசெய்துகொண்டதன் பின்னர், தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாமல் நழுவிச்சென்றுள்ளனர். இதனை அங்கிருந்த அதிகாரியொருவர் அவதானித்து, பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இந்நிலையில், முதலாவது தடுப்பூசியையும் செலுத்தாது இவ்வாறு நழுவிச்சென்றிருப்பார்களோ என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

# ஐஸ் சிக்கியது

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 666 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை குறிப்பிட்டுள்ளது.

இதன் உள்ளூர் சந்தை பெறுமதி சுமார் 2 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டார். இவர், கொழும்பு-14 கிரான்பாஸ் பகுதியை சேர்ந்த 30 வயது இளைஞன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

# 12–18 வயதுக்கு இடைப்பட்டோருக்கு...

பாடசாலைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமாயின், மேலே குறிப்பிட்ட 12-18 வயதுகளுக்கு இடைப்பட்டோருக்கு விரைவில் தடுப்பூசியை ஏற்றவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சூம் தொழிற்நுட்பத்தின் ஊடாக நேற்று (09) மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என சுகாதார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் தரம்-7 முதல் 13ஆம் தரம் வரையிலான மாணவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை நிர்வாகத்தினருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. மாணவர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு நிறைவடைந்து விட்டால் பாடசாலைகளை விரைவாக திறக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இ.தொ.காவுக்கு ...

பால் உற்பத்தி செய்ய பண்ணைகள் எனும் திட்டத்தின் கீழ், மலையக காணிகளை அடாத்தாக பறிக்க இடம் கொடுத்தால், எமது சமூகம் இன்னமும் நூறு ஆண்டுகளுக்கு தொடர்ந்து கூலி தொழிலாளர்களாகவே வாழ வேண்டி வரும் என்பது இ.தொ.காவுக்கு புரியவில்லையா?

பால் உற்பத்தி செய்ய 31 பால் பண்ணைகள் அரசின் கீழ் இருக்கையில், அவற்றை அபிவிருத்தி செய்யாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, கொடுக்க அரசாங்கம் முயல்கிறது என்றார்.

# கப்ராலுக்கு பதிலாக...

அந்த புதியவரை பாராளுமன்றத்துக்குள் வர இடமளிக்காமல், கொரோனாவை ஓரமாக்கிவிட்டு கறுப்பு கொடியுடன் இந்த நாட்டு மக்கள் வீதிக்கு இறங்க வேண்டும் என மக்களிடம் கோரி நின்றார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அவ்வாறு அந்த புதியவருக்கு இடமளித்தால், இந்த நாடு மோசமான நிலைக்கு தான் செல்லும். இவர்களின் கொள்ளை நடவடிக்கைகளுக்கு புதிதாக ஒரு பங்குதாரரை அழைத்து வரும் நடவடிக்கையே முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

# வன்முறைகள்...

இதேவேளை, தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனை வரை இந்த அரசாங்கத்தினால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று (09) விஜயம் செய்திருந்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை கண்காணிப்பு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஆட்சியேறும் தரப்பினருக்கு...

உண்மையில் அவசரகாலச்சட்டத்தை கொண்டு வரும் ஒவ்வோர் அரசாங்கத்தையும் நாம் எதிர்த்தோம். இதற்காக இன்று கைகளை உயர்த்திய அனைத்து உறுப்பினர்கள், அமைச்சர்களும் ஐக்கிய தேசிய கட்சி அவசரகால சட்டத்தை கொண்டு வரும் போது எதிர்த்தனர். எனவே இன்று அமைச்சர்கள், உறுப்பினர்களைப் பார்க்கும் போது கபரகொய்யா உடும்பாக மாறியதைப் போன்று உள்ளனர்.

மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை;

# தலைமை நிர்வாக அதிகாரிக்குப் பிணை

மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகளை முகாமைத்துவம் செய்த, தனியார் கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரியை கைது செய்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சந்தேகநபரை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று (09) ஆஜர்படுத்திய போது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தரவுகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று (09) முற்படுத்தப்பட்டார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகளை முகாமைத்துவம் செய்த தனியார் கம்பனியின் குறித்த தலைமை நிர்வாக அதிகாரி நேற்றுமுன்தினம் (08) குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரத்துக்கும் கொரோனாவுக்கும்

# ரணிலே ஒரே தீர்வு



வீழ்ந்து வரும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்க வேண்டுமென்பதே ஒரே தீர்வு என அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமே கொரோனா வைரஸை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் காணப்படுகின்றன. நாட்டுக்கு ரணில் போன்ற அறிவார்ந்த தலைவர்கள் வேண்டுமென நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்புவதாகவும் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன கூறினார்.

நாட்டில் தற்போது ஆட்சியில் உள்ளவர்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு 69 இலட்சம் மக்கள் தங்களது வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். இன்று 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புக்களும் சூனியமாகியுள்ளது என்றார்.

இன்று நாடு நாசமாக்கப்பட்டு நாட்டு மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை இல்லாதுபோயுள்ளது. இதனால், நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை தேடி வருகிறார்கள். நாட்டை ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்றார்.

## தாளையடி உபதபால் நிலையம் தரமுயர்த்தப்பட்டது



தாளையடி உபதபால் நிலையமானது, தபால் நிலையமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான ஆவணத்தை நேற்று (09) யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

இதற்கான முன்மொழிவை பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் எம்.பி முன்வைத்திருந்தார். இதற்கமைவாகவே, தாளையடி உபதபால் நிலையமானது, தபால் நிலையமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முறையான வேலைத்திட்டங்களுக்கு அமைய

# பாடசாலைகளை ஜனவரியில் மீண்டும் திறக்கவேண்டும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட (முறையான ) வேலைத்திட்டங்களுக்கு அமைய அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பாடசாலைகளை மீள திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் பாரிய வரி ஏய்ப்புக்களை செய்பவர்களுக்குத் தற்போதைய அரசாங்கம் பாரியளவில் வரி சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த ஊழல் வாதிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் வாய்ப்பை இல்லாதொழிக்கும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்றையும் அரசாங்கம் கொண்டுவந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பக்க ரணவக்க தெரிவித்தார்.

இச்சட்டமூலத்தினூடாக கறுப்புப் பணங்கள் வெள்ளையாக்கப்படும். கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான தொழில்நுட்ப குழுவிலிருந்து விசேட நிபுணர்கள் தொடர்ந்து விலகி வருகிறார்கள். இவ்வாறு நிபுணர்கள் விலகுவதால் அந்த குழு அமைக்கப்பட்டமைக்கான நோக்கம் நிறைவேறாது எனவும் அவர் தெரிவித்தார்.



வீடுகளில் உள்ள பிள்ளைகளுக்கு தற்போது கல்வி செயற்பாடுகளை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளை திறப்பதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை. தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளதால், நாட்டுள்ள பிள்ளைகள் தொடர்பில் அவர்களுக்கு அக்கறை இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பக்க ரணவக்க தெரிவித்தார்.

## குளியாப்பிட்டியில் கடத்தப்பட்டவர் அம்பாறையில் மீட்பு?

அம்பாறைப் பிரதேச வீயொன்றில், கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண் ஒருவர், வீதியொன்றில் கிடந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அம்பாறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண் ஒருவர், வீதியொன்றில் கிடந்த சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து, குறித்த பெண்ணை சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை (08) அவரை மனித நடமாற்றமில்லாத வீதியில் வீசிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவர், ரிமாலி பெர்ணான்டோ என்ற 31 வயதுடைய குறித்த இப்பெண் கடந்த ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி குளியாப்பிட்டி பிரதேசத்தில் இனந்தெரியாத சிலரால் முகத்துக்கு மிளகாய்த் தூள் தூவி ஓட்டோவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## பொலிஸ் நிலையங்களில் சோதனை

நாட்டிலுள்ள பல பொலிஸ் நிலையங்களில் நீர்க் கட்டணங்கள் முறையாகச் செலுத்தவில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார, நீர்க்கட்டணத்தை வசூலிப்பதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும், நீர்க்கட்டணம் செலுத்தியுள்ளார்களா? என்பது தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் எனவும், வருமானம் இல்லாத நீர் விநியோகமும் அரசாங்கத்துக்குப் பாரிய பிரச்சினை எனபதையும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

வீட்டுப் பயனாளர்களுக்கான நீர்க் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. எனினும் வேறு வழிகளில் நீர் விநியோகத்தின் ஊடாக அரசாங்கம் வருமானத்தை பெற்றுக்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

# சிக்கினார் ‘பொப்மாலி’

### இரண்டாவது மனைவியும் உதவியவரும் கைது

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த களுத்துறை சந்தித தாப்ருவே என்கிற பொப்மாலியை பொலிஸார் நேற்று (09) கைது செய்துள்ளனர்.

எல்பிடிய கெட்டபொல பிரதேசத்திலுள்ள இறப்பர் தோட்டத்தில் வைத்தே போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


ஒகஸ்ட் 31ஆம் திகதி 288 கிலோ 664 கிராம் போதைப்பொருள் இலங்கைக்கு கடத்தியதாகத் தெரிவித்து பொப்மாலியை கைது செய்வதற்குப் பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியிருந்தனர். அந்த போதைப்பொருளின் உள்நாட்டு பெறுமதி 3 கோடி ரூபாயாகும்.

இந்நிலையில், நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை வெட்டிக்கொண்டு, தலை மறைவாக இருந்த போதே, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். உடனிருந்த இரண்டாவது மனைவியும் உதவியவரும் கைது செய்யப்பட்டனர்.



தடுப்பூசிகளின் இலக்கு வந்தபின்னே

# கட்டுப்பாடுகள் நீக்கப்படும்



தடுப்பூசிகளின் இலக்கு முழுமையடையும்போது, நாட்டில் காணப்படும் பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்படுமென சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளிடமிருந்து இலங்கையர்களுக்கும், இலங்கையர்களிடமிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவாதிருக்கும் வகையில் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்லுவதற்கு முதலில் நாட்டு மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களினதும், சுற்றுலாப் பயணிகளினதும் சுகாதாரப் பாதுகாப்புக்களை உறுதி செய்துகொண்டு சுற்றுலாத் துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது எனவும் தெரிவித்தார்.

கல்விச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு;

# அரசாங்கமே முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும்

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளால் மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பு ஏற்படுமாக இருந்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்குவதில் காலங் கடத்தி வருகிறது. இதனால்,மாணவர்களுக்கே பிரச்சினை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும். எனினும் அரசாங்கம் அதனை செய்யாது பிரச்சினையை நீடித்து வருகிறது. இதனாலேயே மாணவர்களுக்கு இணையவழி கற்றல் தடைப்பட்டுள்ளதாக நாம் பெற்றோருக்கு கூற விரும்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரவைப் பத்திரமொன்றை வெளியிடுவதால் மாத்திரம் இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்பதை நாம் எவ்வாறு நம்புவது? அடுத்தக்கட்டமாக சுற்றுநிரூபம், வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது உள்ளிட்டப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாம் கலந்துரையாட வேண்டுமென அமைச்சரவை உப குழுவுக்கும், கல்வி அமைச்சுக்கும் அறிவித்து ஒருவாரங்கள் ஆகின்றன. எனினும் இதுவரையில் பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இதனாலேயே இப்பிரச்சினை நீடித்து வருகிறது. எங்களது கோரிக்கைகளை நாம் குறைத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை தொடர்பில் நாம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளோம் என்றார்.

## சுபோதினி திட்டத்தை அங்கிகரித்து சுற்றறிக்கை வரும்வரை போராட்டம்

**கனகராசா சரவணன்**

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற வேண்டுமானால் சுபோதினி திட்டத்தை அமைச்சரவையில் அங்கிகரித்து அதனை சுற்றறிக்கை மூலம் அறியத்தர வேண்டும். இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடர்ந்து செல்லும் என வடக்கு, கிழக்கு மாகாண இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் செயலாளர் ஜீ.ருபேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அவரது இல்லத்தில் நேற்று (09) வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



60 நாட்களை கடந்து அதிபர்-ஆசிரியர் சங்க போராட்டம் நீண்டு கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் அரசாங்கமும் அரசாங்கத்துக்கு ஆதரவாளரிப்போரும் உண்மைக்கு புறம்பான கருத்துக்களை சமுதாயத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

“24 வருட காலமாக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சரியான சம்பளத்திலிருந்து ஒரு தொகையினை சூறையாடியே வந்திருக்கின்றது” என்றார்.

தரவேண்டிய சம்பளத்தை எங்களுக்குத் தாருங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம் மாறாக இது சம்பள உயர்வுக்கான போராட்டம் அல்ல. இவ்வாறு நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற பொழுது ஆரம்ப காலகட்டங்களில் அரசாங்கத்தினால் கல்வித் திணைக்களத்தின் மேலதிக செயலாளரான சுபோதினி தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் சம்பளம் முரண்பாட்டுக்கு ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டது.

இது அரசினால் அமைக்கப்பட்ட குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கையே. இதையே நாமும் தீர்வாக கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அரசாங்கமும் அரசாங்கத்திற்கு சார்பானவர்களும் ‘நாம் ஆசிரியர்களுக்கு சரியான தீர்வினை பெற்றுக் கொடுத்து விட்டோம்’ என போலியான செய்திகளை கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆறு மின்தகன மயானங்களை அமைக்க

# அனுமதி

■ செ.கீதாஞ்சன்

வடக்கு மாகாணத்தில், உடனடியாக 6 மின்தகன மயானங்களை அமைப்பதற்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாக, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

இதற்கமைய, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களின் அனுமதியுடன், கரைத்துற்றுப் பிரதேசத்தில் மின்தகன மயானமொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கில் கொரோனா தொற்று காரணமாக மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக்டிரஞ்சன் தலைமையில் நேற்று முன்தினம் (08), அவசரமாக ஆராயப்பட்டு முடிவுகள்



எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் மின்தகன மயானங்கள் காணப்படும் நிலையில், வடமாகாணத்தில் பதிவாகும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கைக்கு, அங்கு சடலங்களை எரியூட்டுவது ஈடுகொடுக்க முடியாமல் உள்ளன.

இதன்படி வடமாகாணத்தில் மேலும் 6 மின்தகன மயானம் அமைப்பதற்கு 6 பிரதேச சபைகளுக்கு அனுமதி வழங்கிய போதும், நிதி வல்லமை மற்றும் திட்ட விருப்பம் இருந்தால் சபைகள் உடனடியாக பணியை முன்னெடுக்கலாம்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, நல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள பிரதேச சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபைக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தனிட் வினவிய போதே, அவர்மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், சபையின் வைப்பில் நிதி உள்ளது என்றார்.

எதிர்வரும் 16ஆம் திகதி சபை அமர்வில் பிரோரனை முன்வைக்கப்பட்டு, சபையின் உறுப்பினர்களின் ஆதரவுடன் நிதியை எடுத்து, மின்தகன மாயானத்தை அமைக்கவுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கான இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அவர் கூறினார்.

பிறந்து 2 நாள்களேயான

## சிசுவுக்கு கொரோனா

■ எம்.றொசாந்த்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில், பிறந்து 2 நாள்களேயான சிசுவுக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் கொரோனா தனிமைப்படுத்தல் விடுதியில் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த சிசுவுக்கு, கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை கொரோனா ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், சிசுவுக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





பிரமந்தனாறுகுளக் காணிகளும்

## பறிபோகும் அபாயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளத்தின் நீரேந்து பகுதிகள் மற்றும் அந்தக் குளத்தின் கீழ் நீண்ட காலமாக பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்த விவசாய காணிகள் என்பன வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டுள்ளன.

பிரமந்தனாறு குளமானது, நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள நடுத்தர குளங்களில் ஒன்றாக காணப்படுவதுடன், 602 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 200க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள், பெரும்போகம், சிறுபோகப் பயிர்ச் செய்கைளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (08) முதல், வனவளத் திணைக்களத்தால் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளத்தின் நீரேந்து பிரதேசங்கள், குளத்தின் கீழான பொதுமக்களின் வயல் காணிகள், குளத்தின் வான் பகுதி என்பன வனப் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு, எல்லைகள் இடப்பட்டுள்ளன.

புலிகளுக்கு எதிராக விசாரணை:

## தமிழரசு கடிதம் அனுப்பவில்லை

■ எம். றொசாந்த்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதும் விசாரணையை வலியுறுத்துவதாகக் கூறப்படும் கடிதமொன்றை, எனக்கு தெரிய, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தமிழரசுக் கட்சி சார்ந்து அனுப்பியதாக இல்லை என, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

அதை மட்டும் தன்னால் உறுதியாக கூற முடியுமெனவும் அவ்வாறு எழுதினால், தான் அதனை வெளிப்படுத்துவதாகவும், அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தான் தமிழரசு பாரம்பரியத்தில் வந்தவனெனவும் சேம் சைட் கோலடிக்கும் தேவை தனக்கு கிடையாதெனவும் கூறினார்.

எது நியாயமோ, எது சரியோ, அதை யார் செய்தாலும் சரி என்பேன் எனத் தெரிவித்த அவர், அதே பிழை என்றால், பிழை என்று கூறுவதே, என்னுடைய பொறுப்பெனவும் கூறினார்.

இனித் தான் பயப்படமாட்டேன் எனத் தெரிவித்த அவர், இதுவரை தான் அடக்கி வாசித்ததாகவும் இதனால், தன் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள் எனவும் கூறினார்.

ஒரு சிலரை தாக்குவதாக நினைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சியை தாக்குகின்றனர் எனத் தெரிவித்த சிவஞானம், 'தமிழரசுக் கட்சியை ஓரங்கட்ட நினைப்பது பகல் கனவு. பங்காளிக் கட்சிகள் போகப் போகிறோம் என முடிவெடுத்தால் அதை நாங்கள் தடுக்க முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறான முடிவொன்றை எடுக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன் என்றும் கூறினார்.

புதுக்குடியிருப்பு மக்களுக்கு

## தொடர்பாடல் நிலையம் திறப்பு

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் - யுவதிகளை இணைந்து உருவாக்கிய கொவிட்- 19 தொடர்பாடல் நிலையத்தை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ். ஜெயக்காந், அண்மையில் (06) திறந்து வைத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் பரவி வரும் கொரோனா தாக்கத்தால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உதவி வரும் அரச நிர்வாக அமைப்புக்களுடன் இணைந்து செயற்படும் வகையில், இந்த கொவிட்- 19 தொடர்பாடல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





எனவே, கொரோனாவால் பாதிப்புற்றிருக்கும் உறவுகள் வைத்திய உதவிகளோ, பொருளாதார உதவிகளோ அல்லது வேறு ஏதாவது அத்தியாவசிய தேவைகளோ ஏற்படுமாயின், உடனடியாக 077- 1116604/ 076-2341114 எனும் அவசர தொடர்பு இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். தொற்று நிலைமை:

## ஏற்ற - இறக்கமாக உள்ளது

■ எம்.றொசாந்த்



யாழ். மாவட்டத்தில், தற்பொழுது தொற்று நிலைமை சரியான முறையில் குறைந்தபாடாக இல்லை எத் தெரிவித்த யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன், கடந்த சில நாள்களில், தொற்று நிலைமை குறைந்து செல்லும் போக்கை காட்டிய போதிலும், ஏற்ற - இறக்கமாக காணப்படுவதாகவும் கூறினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதளை தெரிவித்தார்.

கிழக்கில்

# டெல்டா மயம்

**சுகாதாரத்துறை அதிர்ச்சி: மக்கள் பீதி**

**9 வயது சிறுவன், 81 வயது வயோதிபருக்கு டெல்டா**

■ வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தில், கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 94 சதவீதமானோர் டெல்டா பிறழ்வு ஊடாகவும் 6 சதவீதமானோர் அல்பா பிறழ்வு ஊடாகவும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்று, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

அதில், 09வயது சிறுவன் ஒருவருக்கும் 81 வயது வயோதிபருக்கும் டெல்டா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், அவர் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கடந்த 4ஆம் திகதியன்று, மட்டக்களப்பில் இருந்து 49 மாதிரிகளும், திருகோணமலையில் இருந்து 18 மாதிரிகளும் கல்முனையில் இருந்து 26 மாதிரிகளும் அம்பாறையில் இருந்து 30 மாதிரிகள் என மொத்தமாக 123 மாதிரிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து பெறப்பட்டு, கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூடத்துக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்றார்.



அதன் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்று முன்தினம் (08) கிடைக்கப்பெற்ற நிலையில், 123 மாதிரிகளில் 23 மாதிரிகள் பரிசோதனைக்கு உகந்தது இல்லையெனவும் 100 மாதிரிகளில் 94 டெல்டா பிறழ்வு, 06 அல்பா பிறழ்வு என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு:

பல்கலைக்கழக அறிக்கையின் படி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து அனுப்பப்பட்ட 49 மாதிரிகளில் 43 டெல்டா - 04 அல்பா - 02 பரிசோதனைக்கு உகந்ததல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 09 வயதுடைய சிறுவன் ஒருவரும் டெல்டா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

### கல்முனை:

கல்முனை பிராந்தியத்தில் இருந்து அனுப்பப்பட்ட 26 மாதிரிகளில் 17 - டெல்டா, 01 - அல்பா, 08 - பரிசோதனைக்கு உகந்ததல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்தியத்தில் திருக்கோவில் சுகாதார பிரிவைச் சேர்ந்த 81 வயதுடைய வயோதிபருக்கு டெல்டா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

### திருகோணமலை:

திருகோணமலை பிராந்தியத்தில் இருந்து அனுப்பப்பட்ட 18 மாதிரிகளில் 17 - டெல்டா - 01 பரிசோதனைக்கு உகந்ததல்ல என தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து அனைத்து மாதிரிகளும் உப்புவெளி சுகாதார பிரிவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### அம்பாறை

அம்பாறை பிராந்தியத்தில் இருந்து அனுப்பப்பட்ட 30 மாதிரிகளில் 17 - டெல்டா, 01 - அல்பா, 12 - பரிசோதனைக்கு உகந்ததல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சினோஃபார்ம் வகை தடுப்பூசிகள் டெல்டா திரிபு வைரஸின் தாக்கத்துக்கு எதிராக மிகச் சிறப்பாக தொழிற்படுவதாக ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது எனவும், டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில்

## 95 சதவீதமானவை டெல்டா

■ நடராஜன் ஹரன், வி.ரி.சகாதேவராஜா, எம்.எஸ்.எம்.ஹனீபா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மாதிரிகளில், 95 சதவீதமானவை டெல்டா தொற்றுக்கள் என உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாக, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி சுகுணன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், கடந்த 4ஆம் திகதியன்று கல்முனைப் பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட பிசிஆர் மாதிரிகள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக இரசாயன பகுப்பாய்வு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றார்.

18 பிசிஆர் மாதிரிகளில், 17 பிசிஆர் மாதிரிகள் கொரோனா டெல்டா வைரஸ் தொற்றுக்கும்




ஒரு பிசிஆர் பரிசோதனை மாதிரி கொரோனா அல்பா வைரஸ் தொற்றுக்கும் உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு ள்ளதாக, அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில்

## 88%ளோருக்கு டெல்டா

**43 பேருக்கு டெல்டா: நால்வருக்கு அல்பா**

■ கனகராசா சரவணன், எம் எஸ் எம் நூர்தீன்




மட்டக்களப்பு மாவட்டத்தில், முதன் முதலாக கொரோனா தொற்றுக்கு இலக்காகி, வவுணதீவைச் சேர்ந்த 10 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

அத்துடன், 43 பேருக்கு டெல்டா வேரியன் வைரஸும் 4 பேருக்கு அல்பா வைரஸும் கண்டறிப்பட்டுள்ளதாகவும் மாவட்டத்தில் 88 சதவீதமானவர்களுக்கு டெல்டா வேரியன் வைரஸ் இருக்கக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும், அவர் கூறினார்.

மட்க்களப்பு சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனையில், நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்துக்கு, மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 49 மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன. அதில் 43 பேருக்கு டெல்டா வேரியன் வைரஸும், 4 பேருக்கு அல்பா வைரஸும் கண்டறியப்பட்டுள்ளதாக, புதன்கிழமை (08) அறிவித்துள்ளனர் எனவும் கூறினார்.





## அங்குரார்ப்பணம்...

மட்டக்களப்பு, கள்ளியங்காட்டில் லங்கா சதேச மொத்த விற்பனை நிலையம், நேற்று (09) பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் திநற்துவைக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: கனகராசா சரவணன், வா. கிருஸ்ணா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு

## கடிதம் அனுப்பிவைப்பு

■ கனகராசா சரவணன்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டை தெரிவித்து, அதன் கட்சி தலைவர் கஜேந்திரகுமார், பொன்னம்பலம் செயலாளர் செல்வராச கஜேந்திரன் ஆகியோர் கையொப்பொமிட்டு, நேற்று முன்தினம் (08), ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு, கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இந்தக் கடித்ததில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துவதே தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரே வழி. காணாமல் போனோருக்கான அலுவலகம் என்பது இலங்கை அரசாங்கத்தின் வெறும் ஏமாற்று தந்திரமே ஆகும்.

தொடரும் அடக்குமுறைகளை கண்காணிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட தூதுவர் ஒருவரை நியமிக்க வேண்டு. வடக்கு, கிழக்கில் மனித உரிமைகள் ஆணையகத்தின் கள அலுவலகமொன்று திறக்கப்பட்டு, தொடரும் அடக்குமுறைகள் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் இராணுவ மயமாக்கல், குறித்து ஐ.நா பிரேரணை கவனத்தில் எடுக்காமை மிகுந்த கவலைக்குரியது எனவும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எங்கிருந்தாலும் தடுப்பூசி

## தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவிப்பு

துவாரகஷான்



நாம் குடியிருக்கும் கிராம சேவகர் பிரிவுகளில் தான் தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்காமல், தங்களுக்கு வசதியான எந்த இடத்திலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்ட வேண்டும் என ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் தவிசாளர், எஸ் பாலச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கொரோனாவை தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வரும் நிலையில், தத்தமது கிராம சேவகர் பிரிவுகளில் தான் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் காத்துக் கிடக்கின்றனர்.

அத்துடன், தூர இடங்களில் வேலை செய்கின்றவர்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றார்கள்.

ஒருவர் தமது கிராம சேவகர் பிரிவில் தான் தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் கிடையாது.

தாம் குடியிருக்கும் பகுதியில் அல்லது தொழில் செய்யும் இடத்தில் எங்கு வேண்டுமானாலும் தமது அடையாள அட்டையை அல்லது முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டமைக்கான ஆவண அட்டையைக் காண்பித்து இலங்கையில் எந்த இடத்திலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

ஒருபிடி மண்ணையேனும் வெளியாருக்கு

# “தாரைவார்க்க இடமளியோம்”

## இராதா எம்.பி எச்சரிக்கை

நீலமேகம் பிரசாந்த்



அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பதினோயிரம் ஏக்கர் காணியை, தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமையானது, பெருந்தோட்ட சமூகத்தை அதளபாதாளத்திற்கு கொண்டு செல்லும் அரசாங்கத்தின் வங்குரோத்து செயல்பாடு என, பாராளுமன்ற உறுப்பினர் வே.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மீறி எவரும் உள்நுழைந்தால் அதன் விளைவு எரிமலை தாக்கத்தை விட பேரளவில் இருக்குமென்றும் எச்சரித்துள்ளார்.

கொரோனாவையும் ஊரடங்கையும் சாதகப்படுத்தி பல விடயங்கள் தனியாருக்கும் வெளிநாடுகளுக்கும் தாரைவார்த்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு அரசாங்கத்தோடு இணைந்துள்ள மலையக பிரதிநிதிகளும் முட்டுகொடுத்து வருவது கேவலம் மிகுந்த செயலாகும்.

கொஞ்சம் கொஞ்சமாக பெருந்தோட்ட மக்களை சிதைக்கும் இவ்அரசாங்கம் இன்று பெருந்தோட்ட காணிகளை தனியாருக்கு வழங்கி ஒட்டுமொத்த பெருந்தோட்டங்களையும் சமூகத்தையும் சுடுகாடாக்க முயற்சித்து வருவது வெளிப்படையாகவே இன்று தெரிந்துவிட்டது.

காடாகி கிடந்த நிலத்தை நாடாகியவர்கள் எம் சமூகத்தினர். அந்த நிலங்களை கூறுபோட்டு விற்கும் அரசாங்கத்தையும் அதற்கு முட்டுகொடுக்கும் அரசியல் தலைமைகளையும் ஒருபோதும் பொருப்பு மிகுந்த மலையக பிரதிநிதி என்ற ரீதியில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இது ஆரம்பமே நுனியிலே கிள்ளி எறியாவிட்டால் வேர் விட்டு பல பகுதிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுவிடும். தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக இவ்விடயத்தை ஆரம்பத்திலேயே சுட்டிகாட்டிய வேலுகுமார் எம்.பிக்கு எதிராக அரசாங்கத்துக்கு கொடிபிடிக்கும் பொறுப்பற்ற தலைமைகள் அறிக்கைகளை அள்ளி கொட்டினார்கள் இன்று அந்த முகங்களெல்லாம் ஒழிந்து விட்டன.

மலையக பெருந்தோட்ட சமூகத்தின் காணிகளை அபகரிக்க நினைக்கும் எவராக இருந்தாலும் பரவாயில்லை அதை மலையக மக்கள் முன்னணியோ அல்லது தமிழ் முற்போக்கு கூட்டணியோ பார்த்து கொண்டிருக்காது என்றார்.

# மத்திய மாகாணத்தில் 1,723 கொரோனா மரணங்கள்

மொஹமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நேற்று (9) வரை 1,723 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என, மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கண்டி மாவட்டத்தில் 880 மரணங்களும் மாத்தளை மாவட்டத்தில் 414 மரணங்களும் நுவரெலியா மாவட்டத்தில் 429 மரணங்களும் பதிவாகியுள்ளன என திணைக்களம் தெரிவித்துள்ளது.



# கிக்கிலியமானவுக்குள் நுழைந்த யுவதி மாயம்

டி.சந்ரு, கேதீஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதிக்கு, இந்த மாதம் 5 ஆம் திகதி விறகு சேகரிக்கச் சென்று காணாமல் போன யுவதியை தேடும் பணிகள் நான்காவது நாளாகவும் நேற்று (9) முன்னெடுக்கப்பட்டன.

நுவரெலியா பிலான்டேஷன் தோட்ட கீழ் பிரிவில் வசிக்கும் ஜெயபாலன் கவிபுகனலானி வயது (25) என்ற திருமணமாகாத யுவதியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

“தன்னோடு விறகு சேகரித்துக் கொண்டிருந்த மகள் அவ்விடத்திலிருந்து எவ்வாறு காணாமல் போனார் என்பது தெரியவில்லை என தெரிவித்துள்ள யுவதியின் தாய், சில மணிநேரம் அவ்விடத்தில் கூக்குரல் இட்டு, மகளை தேடியதாகவும், ஆனால் மகள் பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன யுவதி, மனநலம் பாதிக்கப்பட்ட பெண் என்பதுடன், அவரைத் தேடுவதற்காக நேற்று (9) விசேட பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.



டயகம கோவிலையும் பாலத்தையும் பாதுகாக்க

# பாதுகாப்பு மதில்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் நடவடிக்கை

கே.சுந்தரலிங்கம்

டயகம பிரதான வீதியில், சுமார் ஐந்து தோட்டங்களுக்கு செல்லும் பிரதான பாதையின் பாலம் மற்றும் அதற்கு அருகில் அமைந்துள்ள கோவில் என்பவற்றைப் பாதுகாக்க 5 மில்லியன் ரூபாய் செலவில் பாதுகாப்பு மதில் அமைக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாலமும் குறித்த கோவிலும் உடையும் அபாயம் காணப்படுவதாக, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

டயகம இரண்டாம் பிரிவு டயகம கொலனி, டயகம மோனிங்டன், கீழ் பிரிவு மேல்பிரிவு உள்ளிட்ட தோட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களும் இத்தோட்டங்களிலிருந்து நகர பாடசாலைக்கு வரும் மாணவர்களும், மழைக் காலங்களில் பாரிய அச்சத்திலேயே குறித்த பாலத்தில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, இந்த பாலம் மற்றும் கோவிலையும் பாதுகாப்பதற்கு, பாதுகாப்பு மதில் அமைத்து தருமாறு, பிரதேசவாசிகள் கேட்டுக்கொண்டதற்து இணங்க குறித்த மதில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ‘குடை’ மோதலில் நால்வர் காயம்

சேஹ்ன் செனவிரத்ன

கண்டி தேசிய வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் அம்பியூலன்ஸ் சாரதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலால், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவரும் அம்பியூலன்ஸ் வண்டியின் சாரதியொருவரும் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு கடமையிலிருக்கும் ஒருவர் கொண்டு சென்ற குடை, சாதியொருவரின் மீது பட்டுள்ளது. அதனையடுத்து ஏற்பட்ட வாய்த்தர்க்கம், இறுதியில் கைகலப்பில் முடிந்துள்ளது.

> **பாதுகாப்பு கடமையிலிருந்தவர் கொண்டு சென்ற குடை, சாதியின் மீதுபட்டதால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், இறுதியில் கைகலப்பில் முடிந்துள்ளது. மோதலால், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவரும் அம்பியூலன்ஸ் வண்டியின் சாரதியொருவரும் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதி**

“அவ்விருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலை தனது தலையீட்டில் சமரசம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது” என கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எலகலவத்த பாடசாலையின் பெறுமதியான

# பொருள்களை திருடியவர் சிக்கினார்

மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தொற்றால் மூடப்பட்டுள்ள இரத்தோட்டை- ஒபல்கல- எலகலவத்த தோட்டப் பாடசாலையில் வைக்கப்பட்டிருந்த கணினி உள்ளிட்ட பொருள்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில், நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (8) சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என, மாத்தளை பகுதி குற்றவிசாரணைப் பிரிவினர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இத்திருட்டு சம்பவம் தொடர்பில், கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் அதிபர் அலுவலகத்தை உடைத்து, உள்ளே நுழைந்து கணினி, பிரிண்டர் இயந்திரம், ஒலிபெருக்கி உள்ளிட்ட பொருள்களை சந்தேகநபர் திருடியுள்ளதுடன், திருடப்பட்ட பொருள்களின் சில பகுதிகளை கால்வாய் ஒன்றில் வீசியுள்ளதுடன், ஏனையவற்றை விற்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

> **அதிபர் அலுவலகத்தை உடைத்து, கணினி, பிரிண்டர் இயந்திரம், ஒலிபெருக்கி உள்ளிட்ட பொருள்களை திருடியுள்ளதுடன், திருடப்பட்ட பொருள்களின் சில பகுதிகளை கால்வாய் ஒன்றில் வீசியுள்ளதுடன், ஏனையவற்றை விற்றுள்ளனர்**

சந்தேகநபர் எலகல தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்பதுடன், இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தற்காலிக அனுமதியால்

# மரக்கறிகள் அதிக விலைக்கு விற்பனை

சேஹ்ன் செனவிரத்ன

பொருளாதார மத்திய நிலையங்களின் மரக்கறிகளின் மொத்த விற்பனை விலை மிகவும் குறைவாக காணப்பட்டாலும், ஊரடங்கு உத்தரவு அனுமதிப்பத்திரங்களை வைத்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்களால் நுகர்வோர் அதிக விலைக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கட்டுகஸ்தோட்டை- மெனிக்கும்புர பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கத்தின் தலைவர் டீ.என். சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று (9) 6 இலட்ச கிலோகிராம் மரக்கறி தொகைகள் கிடைத்த நிலையில், இதனை கொள்வனவு செய்வதற்கு போதியளவு வர்த்தகர்கள் வருகைத் தராமையால் மரக்கறிகள் தேங்கியுள்ளன.

எனவே, தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளவர்கள், குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து, அதிக விலைக்கு விற்பனை செய்து, நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் என்றார்.








ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கண்டி– சுதுஹம்பொல வீதியில் அமைந்துள்ள, ஐ. எம். எஸ். கல்வி நிலையத்தில், ஸ்ரீ லங்கா சுந்திரக் கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர் சிசிர விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (9) இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில், கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக கலந்து கொண்டு இரத்ததான நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (படங்கள்: இக்பால் அலி)

# மாணவர்களுக்கு ஃபைசர் செலுத்துவது தீர்க்கதரிசனமான பரிந்துரை

மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தடுப்பூசியாக ஃபைசர் தடுப்பூசியே உள்ளதென, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவைச் சந்தித்தபோது ஆலோசனை கூறியுள்ளது.

இதேபோல், இலங்கை மருத்துவ சங்கமும் சைனோஃபாம் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கும் இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையில், இவ்வாறு மூன்றாவது தடுப்பூசி வழங்கப்படுமானால், அஸ்ட்ரா செனகா, ஃபைசர், மொடர்னோ போன்ற தடுப்பூசிகளைச் செலுத்துமாறு அந்தப் பரிந்துரையில் குறித்துரைத்துள்ளது.

இலங்கையில் செலுத்தப்படும் கொரோனா எதிர்ப்பு தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்கள் குறித்தோ, அவற்றில் எது சிறந்தது என்பது குறித்தோ இங்கு பேசப்படவில்லை. மாணவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி செலுத்தப்படவேண்டியதன் முக்கியத்துவம் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டின் புள்ளிவிவரத்தின் படி, 41,43,330 ஆகும். இலங்கை தேசத்தின் மொத்த குடிமக்களில், ஏறக்குறைய கால்பங்கினர் பாடசாலை செல்லும் மாணவர்களாவர்.

மாணவப் பருவம், வழிகாட்டப்பட வேண்டிய பருவம்; இவர்கள் தமது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தபின்னர், தமக்கு ஆர்வமான துறைகளில், தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானித்துக் கொள்கிறார்கள். இவர்களில் பலருக்கு, வெளிநாடு சென்று, உயர்கல்வி கற்க வேண்டும்; வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளைப் பெறவேண்டும் என்ற எதிர்காலத் திட்டம் இருக்கலாம்.

இலங்கையில், பலரக வர்த்தக நாமங்களைக் கொண்ட தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. இவற்றில் சில தடுப்பூசிகளை, சில நாடுகளும் சில சர்வதேச அமைப்புகளும் இதுவரை அங்கிகரிக்கவில்லை. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியம், சினோஃபாம் தடுப்பூசியை இதுவரை அங்கிகரிக்கவில்லை. இதனால், சினோஃபாம் வகைத் தடுப்பூசிகளின் இரண்டாவது டோஸையும் செலுத்திக்கொண்டவர்களை, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள், தமது நாட்டுக்குள் உள்நுழைவதற்கு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்கிறார்கள்.

இத்தகைய சூழலில், வெளிநாட்டு புலமைப்பரிசில், உயர்கல்வி வாய்ப்புகள் பெற்றுச் செல்லும் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், இன்றைய பாடசாலை மாணவத் தலைமுறைக்கும், சகல நாடுகளாலும் அங்கிகரிக்கப்பட்ட தடுப்பூசி வகையைத் தெரிவு செய்து செலுத்துவது, அவர்களது எதிர்காலத்துக்குப் பேருதவியாக அமையும்.

மேலும், இலங்கை மருத்துவ சங்கம் பரிந்துரைத்ததின் பேரில், சினோஃபாம் இரண்டாவது தடுப்பூசி செலுத்தியவர்கள் கூட, மூன்றாவது தடுப்பூசியை அஸ்டா செனிகா, ஃபைசர், மொடர்னோ போன்ற அனைத்து நாடுகளாலும் அங்கிகரிக்கப்பட்ட தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்வது, வெளிநாட்டுப் பயணங்களின் போது ஏற்படும் அசௌகரியங்களைத் தவித்துக்கொள்ளலாம்.

ஆனால், 'இந்தத் தடுப்பூசியைத்தான் செலுத்திக் கொள்வேன்' என்ற பிடிவாதத்துடன் இருப்பவர்கள்தான் கொரோனா வைரஸின் வலைக்குள் இலகுவில் சிக்கிக் கொள்கின்றார்கள். பரிந்துரைகளும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் வரும்போது வரட்டும்; 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இலகுவில் கிடைக்கும் தடுப்பூசி வகைகளைச் செலுத்திக் கொள்வதே, கொரோனாவின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழிமுறையாகும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# இயற்கையின் சமநிலை பேணும் 'கொரோனா'

வி.ரி. சகாதேவராஜா

**கோவிட்– 19 கொள்ளை நோய், உலகளாவிய ரீதியில் பாரிய சமூக, பொருளாதார, சுகாதார மானிட வாழ்வியல் முறைமைகளில் பெருத்த பாதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பதுடன், மனித உயிர்களை கொத்துக்கொத்தாகப் பலி எடுத்தும் கொண்டிருக்கிறது. எமது நாட்டிலும், கோவிட்– 19 பெருந்தொற்றானது பல விஸ்வரூபங்களை எடுத்து, 'டெல்டா' பிறழ்வுடன் தலைவிரித்துத் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது.**

புவியில் உயிரினங்களின் மிகையான இனப்பெருக்கம் ஏற்படும் காலங்களில், இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்காக, காலத்துக்குக் காலம் பல்வேறு கொள்ளை நோய்கள் உருவாகி, பேரழிவை ஏற்படுத்தி வந்துள்ளதை வரலாற்று ரீதியாகப் பார்க்க முடியும்.

ஆறாம் நூற்றாண்டில் ஜஸ்டினியன் கொள்ளை நோய், 14ஆம் நூற்றாண்டில் கறுப்பு மரணம், 1918ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டுவரை ஸ்பானிஷ் காய்ச்சல், 2019ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கொவிட்- 19 எனக் கொள்ளைநோய்கள் அவ்வப்போது உலகில் பேரழிவை ஏற்படுத்தி வந்துள்ளன.

இக்கொள்ளை நோய்கள் மூலம், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களே பெரும்பாலும் மரணத்தை தழுவினார்கள். அதாவது, இயற்கை நோய் எதிர்ப்பாற்றல் உள்ளவர்களை மட்டுமே, இயற்கை தெரிவு செய்து, புதிய சந்ததிகளைத் தோற்றுவிக்கும். இந்நிகழ்வு, உலகின் குடித்தொகையை சமநிலையில் பேண நடைபெறும் இயற்கையின் திருவிளையாடல் ஆகும்.

இந்த நோயின் தாக்கம், சனநெருக்கடி உள்ள பிரதேசங்களில் அதிகளவு மரணத்தை ஏற்படுத்தக் காரணங்கள் உள்ளன. மாசடைந்த வளி, நச்சு தன்மையான உணவு, துரித உணவு, உடல் வருந்திய உழைப்பு அல்லது உடற்பயிற்சி இன்மை போன்றவை ஆகும்.

குறிப்பாக, நீரழிவு, ஆஸ்த்துமா, இருதய நோய்கள், சிறுநீரக நோய், புற்றுநோய், எய்ட்ஸ், மன அழுத்தம் போன்றவை காரணமாகவோ முதுமை காரணமாகவோ நோய் எதிர்ப்பாற்றல் குறைவடைந்து கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரிக்கின்றது.

அதேவேளை, சனநெருக்கடி குறைந்த கிராமங்களில் இந்த நோயின் தாக்கம் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டு, மரணங்களும் குறைந்தளவிலேயே சம்பவித்துள்ளன.

### நச்சுத்தன்மை இல்லாத ஆரோக்கியமாக உணவு,

குறைந்தளவான துரித உணவுப் பழக்கம், சுத்தமான வளி, போதியளவு உடற் பயிற்சி, மகிழ்ச்சியான வாழ்க்கை என வாழ்பவர்கள் நோய் எதிர்ப்பாற்றல் உள்ளவர்களாகக் காணப்படுவார்கள். கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டாலும், விரைவில் பூரணமாகச் சுகமடைந்து விடுவர்.

ஆனால், இவர்கள் மூலம் தான், கொரோனா வைரஸ் பெருமளவில் பரவுகின்றது. குறிப்பாக, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், முதியவர்கள், வேறு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் போன்றோருக்கு, இவர்களிம் இருந்து இலகுவில் கொவிட்-19 நோய் பரவி மரணத்தை ஏற்படுத்துகின்றது.

### பொறுப்புடன் கடப்போம்

அகில உலகையும் உலுக்கிவரும் கொவிட்-19 நோய், கடந்தகாலங்களை விட, மிக மோசமாகத் தாண்டவமாடுகிறது. இலங்கையில் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன; ஒட்சிசனுடன் கூடிய படுக்கைக்காக நோயாளிகள் காத்திருக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும், நம்மிடையே அஜாக்கிரதையான போக்கு தொடர்ந்தும் நீடித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நாட்டில் 100 நோயாளிகளில் கிட்டத்தட்ட ஐவர், இறக்கக்கூடிய கொடுமையான நிலைமையை எட்டுவதை, கடந்த சில நாள்களாக அவதானிக்கிறோம். நோயுற்ற அனைவரும், மிகக் கொடுமையான வலிகளையும் வேதனைகளையும் நோயின் பின்விளைவுகளையும் அனுபவிக்கின்றார்கள். சுவை, மணம் போன்ற அரும்புகள் தற்காலிகமாகத் தொழிற்பாடற்ற நிலையையும் அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எந்த வெளி உதவிகளாலும், இந்த நோயின் தாக்கத்தில் இருந்து நம்மைக் காப்பாற்ற முடியாது எனும் யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளும் வழிவகைகள் தொடர்பாக,தொடர்ந்தும் அஜாக்கிரதையாக இருப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில், நாம் எப்போதும் ஒரு தொற்றாளருக்கு அருகில் இருக்கிறோம் என எண்ணிக்கொள்ள வேண்டும்.

தொற்றுள்ளவர் நம் உறவினர் ஒருவர் அல்லது நம் நண்பரில் ஒருவர் என்பதை மறக்க வேண்டாம். நம் பாதுகாப்பை, வேறு ஒருவரின் கைகளில் ஒப்படைக்க வேண்டாம். நாம் கட்டாயமாக, இந்த அலை ஓயும் வரையும் கடைப்பிடிக்க வேண்டியவற்றை, பின்வருமாறு பட்டியலிட முடியும்.

1. யாரையும் நம்பி, அருகில் சென்று உரையாட வேண்டாம். ஆகக்குறைந்தது இரண்டு மீற்றர் இடைவெளியை வைத்திருங்கள்.

2. எந்தச் சூழலிலும் மூடிய அறை ஒன்றினுள்ளோ இடமொன்றினுள்ளோ முகக்கவசத்தை அகற்ற வேண்டாம்.

3. எந்த இடத்திலும் 10 நிமிடங்களுக்கு மேல் தரித்து நிற்க வேண்டாம்.

4. அலுவலகத்தில் இணைந்து தேநீர் குடிக்கவோ சாப்பிடவோ வேண்டாம்.

5. யாராவது வலிந்து அழைத்தாலும் கேளிக்கைகளுக்கோ விழாக்களுக்கோ செல்வதைத் தவிர்த்து விடுங்கள். திருமண வீடுகளுக்கும் தான். மரண வீடுகள் என்றால் 10 நிமிடங்களில் வெளியேறுங்கள். முடியாவிட்டால் இரண்டு மீற்றர் இடைவெளியை பேணுங்கள்.

6. வாகனங்களில் பயணிக்கும் போது, கதவின் கண்ணாடி ஊடாக வெளியாட்களுடன் உரையாடுவதை தவிருங்கள். இறங்கி உரையாடுவது பாதுகாப்பானது.

7. பொருட்கள், சேவைகளுக்காக வரிசையில் காத்திருங்கள்; யாராவது உங்களை முந்திப்போக எத்தனித்தால் நீங்கள் அவர்களுக்கு வழிவிடுங்கள். நோயை விட சிறிது தாமதித்து செல்வது பரவாயில்லை.

8. வெளித்தேவைக்காக வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியே வாருங்கள்.

9. வியாபாரிகள் உடன் நெருக்கமாக நின்று, பேரம் பேசாதீர்கள்; வியாபாரிகளே! வாடிக்கையாளர்களுடன் நேர்மையாக இருங்கள்.

10. வீட்டுக்குள் கொண்டுவரப்படும் பொருட்களை 24 மணி நேரங்களுக்கு பிறகு பாவிக்கும் வண்ணம் தனியான பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்துங்கள். மரக்கறி போன்றவற்றை முடிந்தால் குளோரின் கரைசலில் அமிழ்த்தி, பின்னர் நீரில் அலசி பத்திரப்படுத்துங்கள்.

11. கைகளை எப்போதும் சவர்க்காரம் இட்டு சுத்தம் செய்யுங்கள்.

12. சவர்க்காரம் இட்டு சுத்தம் செய்த பின்னரே முகக்கவசங்களைத் தொடுங்கள்.

13. நாளை நாமும் தொற்றுக்குள்ளாகலாம். எனவே தொற்றாளர்களை குற்றவாளிகளாக பார்க்கும் மனநிலையை மாற்றிக்கொள்ளுங்கள்.


14. எப்போதும் நோய் அறிகுறிகளை மறைக்க வேண்டாம். முடிந்தவரையும் ஒரு வைத்தியரின் ஆலோசனையைப் பெற முயற்சியுங்கள். சந்தேகம் இருந்தால் அரச வைத்தியசாலைகளில் உங்களை பரிசோதித்துக்கொள்ளலாம்.

நிலைமை இன்னும் மோசமாக மாறுவதற்கு எதிராக, நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இம்முறை வயது வித்தியாசமின்றி அனைவரும் பாதிப்படைந்துள்ளனர். எனவே, விழிப்புடனும் பாதுகாப்புடனும் சமூகப்பொறுப்புடனும் இருப்போம்.

அனைவரும் சுகாதாரத்துறையினரின் ஆலோசனைக்கு அமைய, அனைத்து சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றினால், ஏனையோருக்கு நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் வாழ வேண்டுமானால், இந்தக் கொள்ளை நோயை எதிர்கொள்வதைத் தவிர, வேறு வழி இல்லை. அதற்கு ஓடிஒழிந்து கொள்ள முடியாது.

எனவேதான், சுகாதார துறையினர் வழங்கும் வழிகாட்டல்களைப் பின்பற்றி, கொரோனா வைரஸை எதிர்கொண்டு வாழப் பழகிக்கொள்வோம்.



## வாழ்வியல் தரிசனம்

விவேகம் நிதானமானது. சிந்தித்தே முடிவு எடுக்கும். வேகமாக எதையும் செய்யும்போது, சிலசமயம் மூளையின் ஆற்றலைப் பற்றிப் பலர் எண்ணுவதில்லை.

சுறுசுறுப்பின் பெயர் வேகம் இல்லை. ஆனால், வேகம் தவறான செயலும் இல்லை. இரண்டுமே ஒரே அர்த்தமாகத் தோன்றும். ஆனால் சூழ்நிலைக்கு ஏற்ப சொற்கள் வேறுபடலாம். அறிவோடு சம்பந்தப்படுத்தாது விட்டால், வேகம் காரிய சித்திக்கு உகந்தது இல்லை.

மனிதன் தனது வேலைகளைச் செய்யும்போது, சுறுசுறுப்புடன் இயங்கினால்த்தான், தேகம் ஆரோக்கியமாக இருக்கும். அத்துடன் திடகாத்திரமாகவும் இருக்கும்.

இருந்தபோதிலும், சில வேலைகளை அமைதியாகத்தான் செய்யவேண்டும். சிற்பி கல்லில் சிற்பத்தை வடிக்கும்போது, அமைதியான நிலையில்த்தான் சிலைகளை உருவாக்குவார். சிருஷ்டிப்பின்போது, கலைஞரின் நிலை இயல்பாகவும் பக்குவமாகவும் விவேகமாகவும் இருத்தல் வேண்டும்.

இக்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் வேகத்துடனும் விவேகத்துடனும் இயங்குவதே பொருத்தமானது. அனுபவங்கள், விவேகத்தை அளித்து, வேகத்தை வளர்க்கின்றன.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மண்டைக்கல்லாறில் தடுப்பணைகள் உருவாக வேண்டும்

மண்டைக்கல்லாறில் உவர்த் தடுப்பணை கதவுகள் அமைக்க உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. மண்டைக்கல்லாறு என்பது முல்லைத்தீவின் பழைய முறிகண்டிக்குளம், ஐயன்கன்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய நான்கு குளங்களின் நீர், மழை காலத்தில் நிரம்பி வழிந்து, கிளிநொச்சி வன்னேரிக்குளத்தினை வேகமாக நிரப்பும்.

வன்னேரிக்குளத்தில் இருந்து பெருமளவிலான நீர், மண்டைக்கல்லாறு, செம்மங்குன்று பாலம் வழியாக ஏ-32 சாலையை இரு இடங்களில் குறுக்கறுத்துப் பாயும். பெருமளவு நீர் மண்டைக்கல்லாறு வழியாகவே கடலைச் சென்றடைகின்றது. மண்டைக்கல்லாறு பகுதியில், மழை நீரைத் தேக்கி வைப்பதும் கூடுதலான நீர் வருகின்ற போது திறந்து விடுகின்ற வகையில், தடுப்பணைகள், கதவுகள் அமைய உள்ளது பெரும் நன்மையை உருவாக்க உள்ளது.

ஜெயபுரம் வடகிழக்கு, செம்மங்குன்று, அரசபுரம் ஆகிய கிராமங்களின் பின்பகுதிகளில் பெருமளவு நீர் தேக்கி வைக்கப்பட உள்ளது. பூநகரிக் குளம் அமைக்கப்படுமானால் இப்பகுதி நீரும் அக்குளத்துடன் சேரும். ஏற்கெனவே பூநகரியின் பெருமளவு நிலப்பரப்பு உவரடைந்துள்ளதன் காரணமாக மண்டைக்கல்லாறு பகுதியில் தடுப்பணைகள் உருவாகி நன்னீர் தேக்கி வைக்கப்படுமானால், பூநகரி பிரதேசத்தின் பெருமளவு நிலப்பரப்பு உவர்த் தன்மையில் இருந்து விடுபடும். இக்கருத்துகளை, பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை

# ‘தமிழ் பண்பாட்டு அடையாளங்களை தேடி புறப்படுவோம்’

தமிழ் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகமெங்கும் பயணம் செய்வோம். என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். மேலும்,இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பில் துவங்கித்தான் எழுதப்பட வேண்டுமெகவும் உறுதிப்படத் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் 110 வது விதியின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சில அறிவிப்புகளை வெளியிட்டார் அதன் விவரம் வருமாறு: -கீழடி உலகளாவிய கவனத்தைப் பெற்றுள்ளது. கீழடி அகழாய்வை மத்திய அரசாங்கம் பாதியில் கைவிட்டது

கீழடி மூலம் சங்ககால தமிழர்களின் வாழ்க்கை முறையை உலகமே அறிந்துள்ளது. அங்கு நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளிக்காசு கண்டறியப்பட்டுள்ளது.



திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

கொற்கைத் துறைமுகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தையது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பொருனை ஆற்றங்கரை நாகரீகம் 3,200 ஆண்டுகள் பழமையானது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

கேரளாவின் பட்டணம், ஆந்திராவின் வேங்கி, ஒரிசாவின் பாலூர், கர்நாடகாவின் தலைக்காடு ஆகிய இடங்களில் தொல்லியல் ஆய்வுக்கு முயற்சிக்கப்படும்.

கவுஹாத்தி

## 120 பேர் சென்ற படகு கவிழ்ந்ததில் 41 பேர் மீட்பு; 80 பேர் கேள்விக்குறி



அசாமில், பிரம்மபுத்ரா நதியில் 120இக்கும் மேற்பட்ட பயணிகள் சென்ற படகு கவிழ்ந்ததில், 41 பேர் மீட்கப்பட்டு உள்ளதால், 80இக்கும் மேலானோர் நிலை கேள்விக்குறியாகி உள்ளது.

இங்கு ஜோர்ஹட் மாவட்டத்தில் பிரம்மபுத்ரா நதியில் பயணிகள் படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இதன்படி நிமதி காட் பகுதியில் இருந்து 120க்கும் மேற்பட்டோர், கார், சைக்கிள்கள் உள்ளிட்டவற்றை, ஏற்றிக்கொண்டு தனியாருக்கு சொந்தமான படகில் மஜுலி பகுதிக்கு சென்றனர்.

வழியில், மஜுலியில் இருந்து வந்த அரசாங்கத்துக்கு சொந்தமான படகு அதன் மீது மோதியது. இதில் நிலைதடுமாறிய தனியார் படகு கவிழ்ந்தது. உடனடியாக அரசாங்க படகில் இருந்தவர்கள், தண்ணீரில் தத்தளித்த பலரையும் மீட்டனர். தகவல் அறிந்த தேசிய பேரிடர் மீட்பு படையினர் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளை தொடங்கி உள்ளனர்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது: கவிழ்ந்த படகில் இருந்த 41 பேர் மீட்கப்பட்டு உள்ளனர். மற்றவர்களை தேடும் பணி தொடர்கிறது. பலியானோர் உடல் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன், படகில் பயணித்தோர் எண்ணிக்கையும் உறுதியாக தெரியவில்லை. எனவே, விபத்து குறித்த முழுமையான தகவல்களை தற்போது வெளியிட இயலவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



திருவனந்தபுரம்

### வளர்ப்பு ஆடுகளுக்கு நிபா பரிசோதனை;

## ஆடு மேய்க்கும் சிறுவன் நிபா வைரஸால் பலி

கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே 12 வயது சிறுவன் நிபா வைரசால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தான். அந்த சிறுவனுக்கு எவ்வாறு நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. வௌவால் மற்றும் பன்றி மூலம் மட்டுமே நிபா வைரஸ் பரவி வந்த நிலையில் சிறுவனின் வீட்டில் ஆடுகள் வளர்க்கப்படுவதால், அவற்றிற்கு பரிசோதனை நடத்த அதிகாரிகள் திட்டமிட்டனர்.

ஆடுகளை மேய்க்க சிறுவன் சென்ற வனப்பகுதியில் வௌவால்கள் இருப்பதால் அதன் மூலம் வைரஸ் பரவி இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. இதையடுத்து சிறுவனின் வீட்டில் வளர்க்கப்படும் ஆடுகளின் இரத்தம் மற்றும் சளி மாதிரிகள் எடுக்கப்பட்டன. அது மட்டுமின்றி சிறுவனின் வீட்டைச் சுற்றி வளர்க்கப்படும் ஆடுகளின் இரத்தம் மற்றும் சளி மாதிரிகளை கால்நடை பராமரிப்புத் துறையினர் சேகரித்துள்ளனர்.

இவை போபாலில் உள்ள ஆய்வகத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட உள்ள நிலையில், அப்பகுதியில் உள்ள காட்டுப் பன்றிகளின் இரத்த மாதிரிகளை சேகரிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

புதுடெல்லி

### இந்தோ–பசிபிக் பிராந்தியம்:


## அவுஸ்திரேலியா, இந்திய அமைச்சர்களுடன் சந்திப்பு



இந்தோ-பசிபிக் பிராந்திய நாடுகளாக இந்தியா, அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா, தென்கொரியா ஆகிய நாடுகள் உள்ளன. பாதுகாப்பான, வலுவான, வளமான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை கட்டமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நாடுகளிடையே நட்புறவு நிலவி வருகிறது.

இந்த நாடுகளின் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்கள் ‘2+2 பேச்சுவார்த்தை’ என்ற பெயரில் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். அந்தவகையில், அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் டட்டான், வெளியுறவுத்துறை அமைச்சர் மரிஸ் பய்னே ஆகியோர் இந்தியா வருகிறார்கள். பீட்டர் டட்டான், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங்குடனும், மரிஸ் பய்னே, மத்திய வெளியுறவுத்துறைஅமைச்சர் ஜெய்சங்கருடனும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

பொருளாதார பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, பருவநிலை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து இருதரப்பினரும் பேச உள்ளனர். மேலும், கொரோனாவை கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கைகள், சமமான, பாதுகாப்பான முறையில் தடுப்பூசிகள் விநியோகம், சர்வதேச பொருளாதார மீட்புக்கான முயற்சிகள் ஆகியவை குறித்தும் அவர்கள் விவாதிக்க உள்ளனர். இந்திய பயணத்தை தொடர்ந்து, இந்தோனேஷியா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் அவர்கள் செல்ல உள்ளனர்.



மதுரை

## குழந்தையின் தலையை கொண்டு சென்ற நாய்

மதுரை பிபி குளம் பகுதியில் நேற்று மதியம் குழந்தையின் தலையை மட்டும் தூக்கிக்கொண்டு நாய் ஒன்று ஓடியது. அதை அங்கிருந்தவர்கள் விரட்டினர். இதையடுத்து குழந்தையின் தலையை கீழே போட்டுவிட்டு நாய் தப்பி ஓடியது.

குழந்தை தலை துண்டித்து கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிகிறது. இது குறித்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

பொலிஸார் கூறுகையில், குழந்தையின் தலை கிடைத்துள்ள நிலையில், அப்பகுதியிலுள்ள கால்வாய், குப்பைத்தொட்டியில் உடல் கிடக்கிறதா, குழந்தையை யாரேனும் வீசிச் சென்றார்களா என்பது குறித்தும் என தேடி வருகிறோம் என்றனர்.



# டயலொக் ஆசிஆட்டா; களுத்துறை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு நன்கொடை

தொற்றுநோயைத் தணிப்பதற்கான தேசிய முயற்சிகளை ஆதரிக்கும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, களுத்துறை மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 47L திறன் கொண்ட 50 அவசர மருத்துவ தர ஒட்சிசன் சிலிண்டர்களை களுத்துறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் (RDHS) நன்கொடையாக வழங்கியது.

இந்த முயற்சியின் மூலம், கொவிட்-19 க்கு சிகிச்சையளிக்கப்படும் 7 வைத்தியசாலைளுக்கு அதாவது பாணந்துறை ஆதார வைத்தியசாலை, ஹொரண ஆதார வைத்தியசாலை, பிம்புர ஆதார வைத்தியசாலை, பண்டாரகம மாவட்ட வைத்தியசாலை, மத்துகம மாவட்ட வைத்தியசாலை, இங்கிரிய பிரதேச வைத்தியசாலை மற்றும் ஹல்தோட பிரதேச வைத்தியசாலைகளுக்கு அவசரமாக தேவைப்படும் மருத்துவ தர ஒட்சிசன் தேவைகளை இது நிவர்த்தி செய்கின்றது. சுகாதார அமைச்சால் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வைத்தியசாலைகளில் அவசரமாக தேவைப்படும் முக்கியமான பராமரிப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான சமீபத்திய உறுதிமொழிக்கு அமைய தொற்றுநோய்களின் போது தேசிய சுகாதாரப் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்துவதற்காக, டயலொக்கின் இதே போன்ற பல திட்டங்களைப் பின்பற்றி இந்த நன்கொடையானது வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட, RDHS வைத்தியர் உதயா எல். ரத்நாயக்க, கருத்து தெரிவிக்கையில், தற்போது களுத்துறை - RDHS - இன் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 1,100 க்கும் மேற்பட்ட கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளிகள் பராமரிக்கப்படுகின்றார்கள். இந்த மருத்துவமனைகளில் சில மட்டுமே பின்தங்கிய சமூகங்களால் அணுகக்கூடிய சுகாதார சேவைகளின் ஒரே ஆதாரமாகும், மேலும் செயற்கை ஒட்சிசன் தேவையுடைய நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. நோயாளிகளின் ஒட்சிசன் தேவையை பூர்த்தி செய்வது உயிர்களைக் காப்பாற்றுவதில் ஒரு முக்கியமான காரணியாக மாறியுள்ள நிலையில் மேலும் இந்த சவாலான காலகட்டத்தில் அவசரமாகத் தேவைப்படும் இந்த ஒட்சிசன் சிலிண்டர்களை நன்கொடையாக வழங்கியதற்காக நாங்கள் டயலொக் நிறுவனத்திற்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த ஒட்சிசன் சிலிண்டர்கள் அவசியமாக தேவைப்படும் மருத்துவமனைகளுக்கு விநியோகிக்க RDHS தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# விற்பனை செயலணியினரை செலான் வங்கி கௌரவிப்பு



செலான் வங்கி, தனது 2020 வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் நிகழ்வில் வங்கியில் சிறப்பாக செயலாற்றியிருந்த விற்பனை நிறைவேற்று அதிகாரிகளை கௌரவித்திருந்தது. தொற்றுப் பரவலுடன் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் சிறப்பாக அர்ப்பணிப்புடன் செயலாற்றியிருந்த செலான் வங்கியின் விற்பனை செயலணியினரின் செயற்பாடுகள் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டிருந்தது.

நிறுவனத்தின் வலிமையில் அதன் ஊழியர்கள் தூண்களாக அமைந்திருப்பதாக செலான் வங்கி நம்பிக்கை கொண்டுள்ளது. சவால்கள் நிறைந்த 2020 ஆம் ஆண்டில் சிறந்த பெறுபேறுகளை எய்துவதற்காக தமது சௌகரியமான வலயங்களிலிருந்து அவர்கள் வெளியேறி செயலாற்றியிருந்தனர். பொறுப்பு வாய்ந்த நிதிச் சேவைகளை வழங்கும் வங்கி எனும் வகையில், இது போன்ற நெருக்கடியான காலப்பகுதியில் ஊழியர்களின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காக, அவர்கள் மத்தியில் நேர்த்தியான மனநிலையை உருவாக்கி பேணுவதில் செலான் வங்கி நம்பிக்கை கொண்டுள்ளது. இதன் காரணமாக அவர்களின் முயற்சிகளுக்கு வரவேற்பளிப்பதற்கு மேலதிகமாக, சகல ஊழியர்களுக்கும் பாதுகாப்பாக பணிக்கு சமூகமளிப்பதற்கு போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், சவால்கள் நிறைந்த ஆண்டிலும் முழு சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக அனுகூலங்கள் போன்றனவும் வழங்கப்பட்டிருந்தன.

ஆண்டின் சிறந்த அணித் தலைவர் எனும் விருதை சங்கல்ப குமாரபெலி பெற்றுக் கொண்டதுடன், ஆண்டின் சிறந்த விற்பனைஅதிகாரி விருதை கயங்க ஆரியரட்ன பெற்றுக் கொண்டார்.

அணித் தலைவர் பிரிவில் சிறப்பாக செயலாற்றியிருந்தவர்கள் எனும் கௌரவிப்பைப் பெற்றவர்களில் ஷிரான் ஹெட்டியாரச்சி (பிரத்தியேக கடன்கள் விற்பனை), மாலன் கபந்துகம (வீடமைப்பு கடன்கள் விற்பனை), துமிந்த வெடிசிங்க (கடன் அட்டை விற்பனைகள்) மற்றும் சங்கல்ப குமாரபெலி (குத்தகை விற்பனைகள்) ஆகியோர் அடங்கியிருந்தனர். இஷங்க மனம்பெரி (பிரத்தியேக கடன்கள் விற்பனை), ஹிமன்ஸ பிரேமதிலக (வீடமைப்பு கடன்கள் விற்பனை) மற்றும் மலிந்த லியனகே (கடன் அட்டை விற்பனைகள்) ஆகியோர் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டவர்களில், லோச்சன ஏக்கநாயக்க (பிரத்தியேகக் கடன்கள் விற்பனை) மற்றும் அன்ஜுன பெரேரா (வீடமைப்பு கடன்கள் விற்பனை) அடங்கினர்.

# ‘Fibre of the Nation’ அறிமுகம்




தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, இந்த புதிய கட்டமைப்புக்கு உகந்த வகையில் முதலாவதும், வேகமானதும் பரந்த உயர்தர ஃபைபர் இணைப்பை நாட்டின் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதுடன், டிஜிட்டல் உள்ளடக்கமான இலங்கையை நோக்கி பயணிப்பதற்கு அவசியமான மதிநுட்பமான வாழ்க்கை முறைகளுக்கு வலுவூட்ட முன்வந்துள்ளது.

புரட்சிகரமான தொழில்நுட்பம், இணைப்பு, மதிநுட்பமான வலையமைப்பு மற்றும் மதிநுட்பமான சாதனங்கள் போன்றன பயன்படுத்தப்படும் காலப்பகுதியில், நாட்டின் அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் வேகமான ஒப்டிகல் தொழில்நுட்பம் போன்றன டிஜிட்டல் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கு அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன. குடிமக்கள், வியாபாரசார் வாடிக்கையாளர்கள், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் ஆரம்பநிலை நிறுவனங்கள் போன்ற சகல தரப்பினருக்கும் புதிய உயர்நிலையை எய்துவதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கும், இலங்கையின் நலனை மேம்படுத்துவதற்கும் ஏதுவாக அமைந்திருக்கும்.

பிரத்தியேகமான இணைப்புகளில், முனைவுடனான- முனைவு ஃபைபர் இணைப்புத் தீர்வுகளை இலங்கையில் வழங்கும் ஒரே நிறுவனமாக SLT-MOBITEL திகழ்கின்றது. Internet of Things (IOT), Smart home, Ultra HD TV, Gaming மற்றும் இதர அசல்நேர அப்ளிகேஷன்களை கொண்டுள்ள SLT-MOBITEL இனால் 100 mbps முதல் 1000 mbps வரை உயர் அலைக்கட்டமைப்பு கேள்விகளுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

அமெரிக்கா



# வியப்பில் ஆழ்த்திய ஜில் பைடன்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மனைவி ஜில் பைடன், கல்லூரியொன்றில் பேராசிரியையாக 2009 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார்.

கொரோனாப் பரவல் காரணமாக அமெரிக்காவில் பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டு நிகழ் நிலை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஜில் பைடனும் நிகழ் நிலை வகுப்புகள் ஊடாக பாடங்களை நடத்தி வந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் குறைந்து வருவதால் பாடசாலைகள்,கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, தான் பணிபுரியும் பாடசாலைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த மாணவ - மாணவியருக்கு ஜில் பைடன் பாடமெடுத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக இதற்கு முன் இருந்தவர்களின் மனைவியர் யாரும், வேறு எங்கும் வேலைக்குச் சென்றதில்லை. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த புஷ்ஷின் மனைவி லாரா, கணவர் ஜனாதிபதி ஆனதும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பணியை இராஜினாமா செய்துவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஜில் பைடனின் நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பிரித்தானியா



## தண்டவாளத்தில் ஓடிய கார்

பிரித்தானியாவில் நபர் ஒருவர் ரயில் தண்டவாளத்தில் கார் ஓட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டட்டஸ்டன் நகரைச் சேர்ந்த ஆரோன் ஓ ஹல்லோரன் என்பவர், தனது மிட்சுபிஷி காரை டட்டஸ்டன் நகர ரயில் நிலையத்தின் உள்ளே எடுத்து சென்றதோடு, ஆஸ்டன் பகுதியை நோக்கி சுமார் அரை மைல் தூரத்துக்கு அக்காரை தண்டவாளத்தில் இயக்கியுள்ளார்.

பின்னர் அதனை தண்டவாளத்தின் ஓரத்தில் நிறுத்திவிட்டு அவர் தப்பிசென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் காரின் உள்ளே அவரது அலைபேசி இருந்ததைக் கண்ணுற்ற பொலிஸார் அதனைக் கைப்பற்றியதோடு அந்த அலைபேசி மூலம் ஆரோனைக் கைது செய்துள்ளனர். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்கு 15 மாதங்கள் சிறைத் தண்டனையும் 156 பவுண்ட் தொகையும் அபராதமாக விதிக்கப்பட்டது.

இச் சம்பவம் காரணமாக ரயில் சேவையில் 8 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. ரயில்வே நிர்வாகம் மற்றும் பயணிகளுக்கு 23 ஆயிரம் பவுண்ட் மதிப்பில் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான வீடியோவை பொலிஸார் தங்களது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர்.

குறித்த வீடியோவானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.



## அஸ்ட்ரா செனகா, மொடர்னா செலுத்தியவரா நீங்கள்?

அஸ்ட்ரா செனகா, மொடர்னா கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக நரம்பு கோளாறு ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

'கில்லென்-பார்ஸ் சிண்ட்ரோம்' என்று அழைக்கப்படும் இவ் அரிய வகை நோய் பாதிப்பானது, நோய் எதிர்ப்பு சக்தியால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதைக் குறிக்கிறது.

இது அஸ்ட்ரா செனகா, ஜோன்சன்&ஜோன்சன், மொடர்னா ஆகிய தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இருப்பினும் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே இந்தப் பாதிப்பு பதிவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

வியட்நாம்



## கொரோனாவை பரப்பியவருக்கு சிறை

கொரோனாத் தொற்றால் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான வியட்நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கொரோனாத் தொற்று வியட்நாமில் பரவத் தொடங்கிய போது சிறப்பான நடிவடிக்கைகளைக் கையாண்டு அதனைக் கட்டுப்படுத்தியமைக்காகப் பாராட்டுகளைப் பெற்றுக் கொண்ட வியட்நாமின் நிலைமை தற்போது, தலைகீழாக மாறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் சில ஆயிரங்களாக இருந்த மொத்த கொரோனாப் பாதிப்பு தற்போது 5 இலட்சத்தை நெருங்கியுள்ளதால் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வியட்நாமின் ஹோ சி மின் நகரத்திலிருந்து கா மவ் நகருக்கு திரும்பிய லீ வான் ட்ரி என்னும் நபர், 21 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளாமல் சுற்றித் திரிந்துள்ளார்.

பிரேஸிலில்

## தன்னைத் தானே திருமணம் செய்து கொண்ட மொடல்



பிரேஸிலைச் சேர்ந்த பிரபல மொடல் நடிகை, தன்னைத் தானே திருமணம் செய்துகொண்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கிரிஸ் கேலரா என்ற 33 வயதான மொடல் நடிகையே இவ்வாறு திருமணம் செய்து கொண்டுள்ளார். கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற இத் திருமணத்திற்கு அவரது நெருங்கிய நண்பர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கிரிஸ் கேலரா தனது கடந்த காலங்களில் ஏற்பட்ட உறவு முறிவுகளால் விரக்தி அடைந்து இனி தனியாக வாழலாம் என்று தீர்மானித்து இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவரது முடிவை பலரும் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.

இதற்கு, " என்னை மற்றவர்களிடம் நிரூபிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. நான் அவர்களின் கருத்துகளை பார்ப்பதில்லை" என்று பதிலளித்திருக்கிறார்.

முன்னதாக 2020 ஆம் ஆண்டு பட்ரிசியா கிறிஸ்டின் என்ற பெண் தன்னை தானே திருமணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோம்





தகுதிச்சுற்றில்

# பிரான்ஸ், போர்த்துக்கல் வெற்றி

உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான ஐரோப்பிய பிரிவு தகுதிச்சுற்றில் பிரான்ஸ், போர்த்துக்கல் அணிகள் வெற்றி பெற்றன.

ரோம் நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் பிரான்ஸ் 2-0 என்ற கோல் கணக்கில் ஃபின்லாந்தை வீழ்த்தியது. பிரான்ஸ் தரப்பில் முக்கிய வீரரான கிலியன் பாபே காயம் காரணமாக விளையாட முடியாமல் போனாலும், அந்த அணி சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது. பிரான்ஸ் தர்பில் ஆன்டனி கிரீஸ்மான் 25 மற்றும் 53 ஆவது நிமிடங்களில் கோல் அடித்தார்.

குரூப் ஏஷ வில் போர்த்துக்கல்-அஜர்பைஜான் அணிகள் மோதிய ஆட்டம் பாகு நகரில் நடைபெற்றது. இதில், போர்த்துக்கல் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை பதிவு செய்தது. தொடர்ந்து பலமுறை மஞ்சள் அட்டை பெற்றதால் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பங்கேற்க முடியாமல் போனது.

அணியின் தரப்பில் பெர்னார்டோ சில்வா (26 ஆவது நிமிஷம் ஆன்ட்ரே சில்வா (31), டியோகோ ஜோடா (75 ஆகியோர் கோல் அடித்தனர்.

## பங்காளதேஷ் அணி வெற்றி

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 4 ஆவது ருவண்டி-20 ஓவர் கிரிக்கெட் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் (08) நடந்தது. 'டாஸ்' ஜெயித்து முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 19.3 ஓவர்களில் 93 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக வில் யங் 46 ஓட்டங்களை எடுத்தார்.

6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்ற பங்களாதேஷ் அணி, தொடரை 3-1 எனக் கைப்பற்றியது.

பங்களாதேஷ் அணியின் சார்பில் நசும் அஹமது, முஸ்தபிஜூர் ரஹ்மான் தலா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

சுலபமான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணி 19.1 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை கொடுத்து, 96 ஓட்டங்களைப் பெற்றது.





## இந்திய அணியின் ஆலோசகராக தோனி

ஐசிசி உலக கோப்பை டி-20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ். தோனி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலகக் கோப்பை டி20 தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 14 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற உள்ளது. இந்த தொடருக்கான விராத் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. மொத்தம் 15 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ரோகித் ஷர்மா துணை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அனுபவ வீரர்கள் ரோகித் சர்மா, கே.எல். ராகுல், ரிஷப் பந்த், இஷான் கிஷன், ஹர்திக் பாண்டியா, ஜடேஜா, ராகுல் சாஹர், அஸ்வின் இடம் பெற்றுள்ளனர்.

## செய்தித் துளிகள்...

உலகக் கோப்பை கால்பந்து போட்டியை 4 ஆண்டுகளுக்கு பதில் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்துவது குறித்து பிபா ஆலோசித்து வருகிறது. அதற்கு கால்பந்து கிளப்கள் உட்பட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். வேல்ஸ் அணியின் தலைவர் கேரத் பால், 'உலக கோப்பை மதிப்பு வாய்ந்தது. அதை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தினால் அந்த மதிப்பும், எதிர்பார்ப்பும் குறைந்து போகும். அது தவறான முடிவு' என்று தெரிவித்துள்ளார்.

## ரத்தாகுமா குளிர்கால ஒலிம்பிக்?

'சீனாவில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பிபிசி உள்பட முன்னணி ஊடகங்கள் அங்கு அடுத்த ஆண்டு நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியை ஒளிபரப்பாமல் புறக்கணிக்க வேண்டும். அப்படி ஒளிபரப்பினால் சீனாவின் மனித உரிமை மீறல்களுக்கு அவர்களும் உடந்தையாக இருப்பதாகவே அர்த்தம்' என்று சர்வதேச திபெத் கூட்டமைப்பின் தலைவர் டெட்ஹாங் கூறியுள்ளார். இந்த தொடரை ரத்து செய்ய மனித உரிமை குழுக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

## அஸ்வின் அணியின் சொத்து

டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் 4 ஆண்டுகளுக்குப்பின் ரவிச்சந்திர அஸ்வினுக்கு வாய்ப்புக் கிடைத்தது குறித்து தேர்வுக் குழுத் தலைவர் சேத்தன் ஷர்மா, அஸ்வின் அணியின் சொத்து என விளக்கம் அளித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் அக்டோபர் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை பிசிசிஐ சார்பில் நடத்தப்படும் டி20 உலகக் கோப்பைப் போட்டிகள் நடக்கின்றன. இதற்கான 15பேர் கொண்ட இந்திய அணியை அனைத்து இந்திய சீனியர் தேர்வுக்குழு நேற்று முன்தினம் (08) அறிவித்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 10 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.